# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 11 இதழ் : 12 டிசம்பர் 2025 தனிப்பிரதி - ரூ.20/- ஆண்டு சந்தா ரூ.200/-
Vol : 11 Issue No : 12 December 2025 Single Copy – Rs.20/- Annual Subscription Rs.200/-



# இம்மானுவேல்

## நம்மோடிருக்கிறார்

மத்தேயு 1:23

# உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் அற்புதம் செய்த தேவன்!



கடந்த செப்டம்பர் மாதம் 9-ம் தேதியன்று எனது மகளின் மாமனார் இரு சக்கர வாகனத்தில் சென்றுக் கொண்டிருந்தப் பொழுது விபத்தில் சிக்கி கழுத்து நரம்பு பாதிக்கப்பட்டது. உடனே KMCH Hospital ICU-ல் அட்மிட் செய்தார்கள். உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்று மருத்துவர்கள் சொல்லி விட்டார்கள். இடுப்புக்குக் கீழே உணர்ச்சி இல்லை. மிகவும் இக்கட்டான சூழ்நிலை. நான் வாட்ஸ் அப் மூலம் Dr.ஆனந்த ஸ்திரா ஐயா அவர்களுக்கு என் சம்பந்தியைக் குறித்து தெரியப் படுத்தினேன். ஐயா அவர்கள் ஜெபித்துவிட்டு "இயேசுகிறிஸ்து உயிர் மீட்சியை கொடுப்பார், கவலைப்பட வேண்டாம்" என்று கூறினார்கள். அவர்கள் கூறியது போலவே இயேசு அற்புதம் செய்தார்! கர்த்தர் தாமே அவருக்கு ஜீவனை கொடுத்து கடந்த சனிக்கிழமை சுகமாகி வீட்டிற்கு வர கிருபை செய்தார். தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றேன்.

**திரு.ஜெயக்குமார், திருப்பூர்**



## குடும்பமாக இரட்சிக்கப்பட்டோம்!

1996-ல் நாங்கள் கும்பகோணத்திலிருந்தபொழுது Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் நடத்திய கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். அப்பொழுது எளிய நிலையிலிருந்த ஐயாவை கர்த்தர் எப்படி உயர்த்தினார் என்பதை கேட்ட பொழுது இயேசுவின் மேல் எனக்கு விசுவாசம் உண்டானது. அதன்பிறகு அன்பரின் ஊழியத்தின் மாதாந்திர பத்திரிக்கையை தவறாமல் படித்து சத்தியத்தை அறிந்துக்கொண்டேன். ஆவியில் பெலன் அடைந்தேன். என் குடும்பத்தினர் அனைவரும் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். "நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்" என்ற வார்த்தையின்படி நாங்கள் குடும்பமாக கர்த்தரை சேவிக்க ஆரம்பித்தோம். ஐயா அவர்கள் தீர்க்கதரிசனமாக சொன்ன அநேக காரியங்கள் எங்கள் வாழ்வில் நிறைவேறியது. குறிப்பாக எனது மகள் MA., M.Phil., P.hd., படித்து முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். இப்பொழுது நாங்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் வசிக்கின்றோம். ஐயா தூத்துக்குடி வருவதை அறிந்து குடும்பமாக கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளோம். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக!

**சகோ.ஜாஷ்வா விஜயகுமார், திருநெல்வேலி**

# அன்பரின் ஊழியம்

## ஆசிரியர் உரை




நமக்குள்ளே வாசம்பண்ணுகிற நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாடுகிற நாம் அவருடைய உபதேசங்களையும் மறவாமல் கடைப்பிடித்து வாழ்வோம்.

இந்த வருடத்தின் இறுதி மாதத்திற்குள் வந்துவிட்டோம். கடந்த மாதங்களில் சந்தித்த ஒரு சில பிரச்சனைகள் இதுவரை முடிவுக்கு வராமல் இருக்கலாம். பயப்படாதிர்கள். இந்த மாதத்தின் இறுதிக்குள் கர்த்தர் உங்களுக்கு துணை நின்று, இந்த வருடத்தை வெற்றிகரமாக முடிக்க உதவி செய்வார். வரப்போகின்ற புதிய வருடம் உங்களுக்கு எல்லாவிதத்திலும் ஆசீர்வாதமாக, பரலோக மகிமை நிறைந்ததாக இருக்க ஜெபிக்கிறேன்.

இந்த மாதம் முழுவதும் நீங்கள் இரண்டு காரியத்திற்காக கர்த்தரை துதியுங்கள். ஒன்று கர்த்தர் உங்கள் வாழ்வில் செய்த அனைத்து நன்மையான காரியங்களுக்காக துதியுங்கள். மற்றொன்று நீங்கள் சந்தித்த பாடுகள், கஷ்டங்கள், சரீர வேதனைகள் எதுவாக இருந்தாலும் அதற்காகவும் கர்த்தரை துதியுங்கள். இந்த வருடத்தின் துவக்கத்திலிருந்து நீங்கள் கர்த்தருக்கு செய்த பொருத்தனைகளை நிறைவேற்றாமல் இருந்தால் உடனடியாக அந்த பொருத்தனைகளை செய்து முடியுங்கள். புதிய வருடத்தில் நுழைவதற்கு முன் தினந்தோறும் ஊக்கமாய் ஜெபியுங்கள்.

**நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். 1 யோவான் 5:4.** இனி வருகின்ற காலங்கள் கொடூரமான காலங்களாகவும், இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு நம்மை ஆயத்தமாக்குகிற காலமாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட காலத்தில் நம்முடைய சுய பெலத்தினாலும், மனித ஒத்தாசையினாலும் நம் வாழ்க்கையை ஜெயமுள்ளதாக்கிக் கொள்ள முடியாது. தேவனை பற்றிய விசுவாசத்தினால் மாத்திரமே நாம் ஜெயமுள்ளதாக்கிக் கொள்ள முடியும். கடைசி கால துன்பங்களின் ஊடாக செல்லும்பொழுது நம் விசுவாசம் கொஞ்சம்கூட தளரக்கூடாது. அதற்கு பதில் தேவன் மேல் உள்ள விசுவாசத்தில் நாம் வளரவும், பெருகவும் வேண்டும்.

கடந்த மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். டிசம்பர்



மாதம் திருச்சி சிறப்பு உபவாச ஜெபம், தாம்பரம், புத்தாண்டு வாக்குத்தத்த கூட்டங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். ஏனென்றால் கூட்டங்களின் வாயிலாக ஏராளமான ஆத்துமாக்களை நேரில் சந்திக்க முடிகிறது. அவர்களை நாம் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தவும் உதவியாக இருக்கிறது. ஆகவே கூட்டங்களை நடத்துவதற்கு நீங்கள் தாராளமாக உதவி செய்யுங்கள். மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கைகளைக் கொடுத்து தாங்குங்கள்.

கிறிஸ்து பிறப்பு பண்டிகையை முன்னிட்டு நமது Ministry of Jesus Youtube சேனலில் வெளிவருகிற பாடல்களை கேட்டு மகிழுங்கள். அநேகருக்கு share செய்யுங்கள். ஜனவரி மாதம் 3-ம் தேதி காலை திருச்சியில் நடைபெறயிருக்கிற புத்தாண்டு ஆசீர்வாதக் கூட்டத்திற்கு பங்காளர்களாகிய நீங்கள் அனைவரும் குடும்பமாக வந்து கலந்துக்கொள்ளுங்கள்.

எங்கள் அப்பா, அம்மா இருவருடைய நல்ல சுகத்திற்காகவும், நல்ல ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள். ஊழியத்திற்காகவும் எங்கள் அனைவருக்காகவும் ஜெபியுங்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக.




கிறிஸ்துவின் பணியில் Dr.ஜேன் ஜாஷ்வா
jane@mojindia.org






ஆசிரியர்/வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

**சந்தா விபரம்**

இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு: ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-



காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 9488845627
தெலுங்கு: +91 9944536343
மலையாளம்: +91 9488932937

e-mail: info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பின் ஊழியம், 40 S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003
Address: Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy – 620 003



# இம்மானுவேல்

**தேவ செய்தி: Dr. ஜேன் ஜாஷ்வா**

கிறிஸ்துவுக்குள் அன்பான பங்காளர்கள் ஒவ்வொருவரையும் இயேசுவின் நாமத்தில் அன்புடன் வாழ்த்துகிறேன். இந்த தேவ செய்தியின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். 2025-ம் ஆண்டை நல்ல சுகத்துடன், பாதுகாப்புடன், சந்தோஷத்துடன் கடந்து வரும்படி செய்த நம் தேவனாகிய கர்த்தருக்கு நாம் நன்றிகளை செலுத்துவோம். இந்த கடைசி மாதத்திலும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவதில் முனைந்து நிற்போம்.

நம் வாழ்வில் சில காரியங்களை செய்யும்பொழுது கண்டிப்பாக இதை முடித்துவிட வேண்டும் என விரும்புவோம். உதாரணமாக உடற்பயிற்சி செய்வது நமக்கு சற்று கடினமாக இருந்தாலும், உடற்பயிற்சி செய்வதற்கு நேரம் இல்லாமல் இருந்தாலும் கட்டாயத்தின் பேரில், நம் சரீரம் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதற்காக நாம் உடற்பயிற்சி செய்வோம். உடற்பயிற்சி செய்வதை அநேகர் விரும்ப மாட்டார்கள். நம் சரீரம் நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காக மட்டுமே நாம் உடற்பயிற்சிகளை செய்வோம். அதேப்போல கர்த்தரை துதிப்பது, அவருக்கு நன்றி செலுத்துவது ஆவிக்குரிய ஒரு பயிற்சி. ஏனென்றால் நம்முடைய பாடுகள், கண்ணீர் இவற்றை நாம் கடந்து வரும்பொழுது நாம் ஏன் தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும் என நினைத்து சோர்ந்துபோய்விடுவது வழக்கம். **ஆண்டவரின் அன்பிற்காக இரக்கத்திற்காக, கிருபைக்காக, தயவிற்காக அவரை நினைத்து நினைத்து நன்றி செலுத்தும்பொழுது ஆவிக்குரிய வாழ்க்கையிலும் நாம் முன்னேறுவோம். அத்துடன் உலகப்பிரகாரமான வாழ்விலும் நமக்கு அதிகமான நன்மைகளை கொடுத்து நம்மை ஆசீர்வதித்து உயர்த்துவார்.**

இந்த மாதத்திலும் கிறிஸ்துமஸ் நாட்களில் ஆண்டவர் உங்களோடு பேச விரும்புகிற வசனம், **மத்தேயு 1:23 இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்.** இந்த வசனமே ஒரு தீர்க்கதரிசனம் நிறைவேறுதல் வசனமாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக்குறித்து பழைய ஏற்பாட்டில் பல தீர்க்கதரிசிகள் பல தீர்க்கதரிசனங்களை

கூறினார்கள். அவை அனைத்துமே இயேசுவின் பிறப்பில் நிறைவேறின. ஏசாயா தீர்க்கதரிசியும் இயேசுவின் பிறப்பைக் குறித்து கூறியுள்ளார்.

**ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார், இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள். ஏசாயா 7:14.**

**யூதாவுக்குள் புகுந்து பிரவாகித்துக் கடந்து, கழுத்துமட்டும் வரும் என்றார். இம்மானுவேலே, அவன் செட்டைகளின் விரிவு உமது தேசத்தின் விசாலத்தை மூடும். ஏசாயா 8:8**

இந்த வசனங்களில் இயேசுகிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து இம்மானுவேல் என குறிப்பிடுகிறார். இயேசுகிறிஸ்து பிறந்தப்பொழுதும் தேவ தூதன் யோசேப்பிடம் இம்மானுவேல் என பெயரிடும்படி கூறுகிறான். இம்மானுவேல் எவ்வளவு அழகான, அற்புதமான ஒரு பெயராக இருக்கிறது.

பல சமயங்களில் உலக வழக்கத்தின்படி நம் வீட்டில் பிறக்கிற பேரப் பிள்ளைகளுக்கு உயிரோடிருக்கிற அல்லது மறைந்த தாத்தா, பாட்டியின் பெயரை சூட்டுவது வழக்கம். உங்கள் தாத்தா பாட்டி, அத்தை, மாமா இப்படி வாழ்ந்தார்கள், இந்த காரியங்களையெல்லாம் செய்தார்கள் என்று கூறி அவர்களை மறக்காமல், அவர்களை நினைவில் வைத்திருப்பதன் அடையாளமாக அவர்கள் பெயர்களை பேரப்பிள்ளைகளுக்கு வைத்து மகிழுகிறோம். ஏனென்றால் இது அவர்களை நினைவு கூர்வதாகவும், அவர்களை கனப்படுத்துவதாகவும், அவர்கள் நம்மோடு இருக்கிறார்கள் என்ற உணர்வை தருவதாகவும் இருக்கிறது.

இம்மானுவேல் என சொல்லும்பொழுது தேவனே நம்மோடுகூட இருக்கிறார் என்பதை குறிக்கின்ற பேராக இருக்கிறது. தேவன் நம்மோடு இருக்கிறார் (God with us) என்பதன் அர்த்தம் என்ன? தேவன் தாமே நம்மோடு ஜீவிக்கிறவர். அவர் நம்மோடுகூட இருக்கிறவர், நம்மை ஆசீர்வதிக்கிறவர், நம்முடைய பாடுகளில் பங்குபெறுகிறவர் என நாம் சொல்லிக்கொண்டே போகலாம். குறிப்பாக தேவன் தற்சுரூபமாய் இந்த உலகில் நம்மோடு வாழ்ந்துக்கொண்டிருக்கிறார் என்பதே சரியான அர்த்தம் ஆகும்.

ஆம் பிரியமானவர்களே! நம்மைப் படைத்த, நம்மை உருவாக்கிய, நம்மைப் பற்றி மிகவும் நன்கு அறிந்த கர்த்தர் நம்மைப் பார்த்துச் சொல்கின்றார். நான் உங்களோடு எப்பொழுதும், ஒவ்வொரு வினாடியிலும் இருக்கும் தேவன், நான் இம்மானுவேல்! இம்மானுவேலாகிய தேவன் நம்மோடு இருக்கவே எப்பொழுதும் விரும்புகிறார். இம்மானுவேல் நம்மோடு கூட இருந்து நம்முடைய எல்லா காரியங்களையும் சரியாக நடத்துகிறவர். இந்த தேவன் ஏன் நம்மோடுகூட இருக்கிறார்? எதற்காக நம்மோடுகூட இருக்கிறார்?

பழைய ஏற்பாட்டிலே நாம் பார்க்கும் பொழுது, தேவன் எல்லா நேரங்களிலும் தம் தேவதாசர்களுடன் இருந்தார். அதனால் அவர்கள் ஆசீர்வாதத்தையே பெற்றுக் கொண்டனர். **கர்த்தர் யோசேப்போடே இருந்தார். அவன் காரிய சித்தியுள்ளவனானான். (ஆதி.39:2) சேனைகளின் கர்த்தர் தாவீதோடிருந்தார். தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான். (நாளா.11:9)** தேவன் இஸ்ரவேல் ஜனங்களுடன்கூட இருந்தார். அத்துடன் மோசேயிடம், 'என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும்' என சொல்லி அவர்களை வழிநடத்தினார். யோசுவாவிடம் சொல்கிறார், 'நீ பயப்படாதே, நீ கலங்காதே நான் மோசேயுடன் இருந்ததுப்போல உன்னோடும் இருப்பேன்' என சொல்லுகிறார். இத்துடன் ஆண்டவா



முடிக்கவில்லை. புதிய ஏற்பாட்டிலே இன்னும் விசேஷித்து ஆண்டவர் சொல்வது, 'நான் எப்பொழுதும் உன்னோடு இருக்கிறேன், உங்கள் ஒவ்வொருவரோடும் இருக்கிறேன், இயேசுவாக, தேவனுடைய குமாரனாக, மனுஷ குமாரனாக நான் உங்களோடு இருக்கிறேன். உங்கள் வாழ்வின் ஒவ்வொரு அங்கத்திலும் உங்களோடு ஜீவிக்கிறவராக இருக்கிறேன் என்று சொல்லுகிறார். இதைக் குறித்தே இந்த செய்தியில் நாம் தியானிப்போம்.

## இம்மானுவேல் - நம்மை பாதுகாக்கிற தேவன்!

இம்மானுவேலாகிய தேவன் நம்மை என்றென்றும் பாதுகாக்கிறவராக நம்மோடு இருக்கிறார். எல்லாத் தீமைகளிலிருந்தும் நம்மை பாதுகாக்கிறவராக இருக்கிறார். நம்மைச்சுற்றி இருக்கிற சத்துருக்கள் அல்லது மனிதர்களால் நமக்கு வருகிற ஆபத்துகளிலிருந்தும் நம்மை பாதுகாக்கிறவராக இம்மானுவேல் இருக்கிறார்.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் பிறந்தபொழுது ஏரோது ராஜா இயேசுவை கொலை செய்ய முயற்சித்தான். **மத்தேயு 2:8-ல் நீங்கள் போய், பிள்ளையைக்குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள், நீங்கள் அதைக் கண்டபின்பு, நானும் வந்து அதைப் பணிந்துகொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பினான்.** ஏரோது சாஸ்திரிகளிடத்தில் கூறிய இந்த வார்த்தையில் சூழ்ச்சி இருப்பதை சாஸ்திரிகள் அறியவில்லை. மரியாளுக்கும், யோசேப்பிற்கும் இது தெரியாது. மேய்ப்பர்களுக்கும் தெரியாது. எலிசபெத், சகரியாவிற்கும் இது தெரியாது. ஆனால் தேவாதி தேவனுக்கு தெரிந்தது. தன்னுடைய குமாரனை அவன் கொலை செய்ய நினைக்கிறான் என்பதை அறிந்த தேவன் அங்கே மிக அருமையாக குழந்தையை பாதுகாக்கின்றார். **கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு, ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான், ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அங்கே இரு என்றான். மத்தேயு 2:13.**

குழந்தையாக இருந்த இயேசுவை பாதுகாப்பதற்கு தேவன்தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுகிறார். சாஸ்திரிகள் நட்சத்திரத்தை கண்டு அதன் காலத்தை உணர்ந்து, இயேசுவை பார்ப்பதற்காக கிழக்கிலிருந்து வந்தவர்கள் என்று வேதம் சொல்கிறது. நட்சத்திரத்தை கண்டு தூரத் தேசத்திலிருந்து பயணித்து வந்தார்கள் என்றால் அவர்கள் பல கஷ்டங்களை கடந்துதான் வந்திருப்பார்கள். அந்த வழிப்பயணத்தில் கர்த்தர் அவர்களை பாதுகாத்தார். அவர்கள் இயேசுவை கண்டு, பணிந்து, தங்களுடைய பொக்கிஷங்களை எல்லாம் இயேசுவின் பாதத்தில் காணிக்கையாக வைத்தார்கள். அவர்கள் ஏரோதினிடத்திற்குத் திரும்பிப் போகவேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள். இவ்வாறு அவர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பி செல்கிற வரைக்கும் தேவபாதுகாப்பு அவர்களோடுகூட இருந்தது.

ஆம், பிரியமானவர்களே! இதேப்போல இயேசுகிறிஸ்து உங்களையும் எல்லாவிதத்திலும் பாதுகாப்பார். **சங்கீதம் 121-ல் கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார், அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.** கர்த்தர் உன் போக்கையும் உன்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார் என்று எழுதப்பட்டுள்ளது. இயேசு உங்களோடுகூட இருக்கும்பொழுது தீமை செய்யும்படி ஒருவனும் உங்களை அணுகவும் முடியாது, உங்களைத் தொடவும் முடியாது. ஒருவேளை அவர்கள் தீமை செய்ய நினைத்தாலும் கூட தேவன் உங்களை பாதுகாப்பார். சத்துருக்கள் பல சூழ்ச்சிகளை செய்து உங்கள் வாழ்க்கையை அழிக்க நினைத்தாலும், கர்த்தர் தாமே உங்களுக்காக யுத்தம் செய்து உங்களை காக்க வல்லவராயிருக்கிறார். உங்கள் ஆத்துமாவை வழுவாமல் காக்க அவர் வல்லவராய் இருக்கிறார். **வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும்,... (யூதா 1:24)** சத்துரு சிங்கத்தை போல கர்ஜித்துக்கொண்டு, வலுசர்ப்பத்தை போல தந்திரமாக உங்கள் பின்னால் வந்தாலும், அவற்றை நீக்கி, கர்த்தர் உங்களை பாதுகாப்பார். உங்கள் ஆத்துமா அழிந்து போகாமல், நரகத்திற்கு சென்று நித்திய நித்திய காலமாக வேதனையடையாதபடி அவர் உங்களை பாதுகாப்பார். நித்திய அழிவிற்கு உள்ளாகாதபடி பாதுகாக்கின்றார். **"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்". யோவான் 3:16** எந்த ஒரு மனிதனும் கெட்டுப்போகிறதை தேவன் விரும்பமாட்டார். அதனால்தான் இம்மானுவேலாக நம்மோடு இருக்கிறார்.

உலகத்தில் ஏராளமான அழிவின் காரியங்களும், பல்வேறு விதமான போராட்டங்களும் நிறைந்து காணப்படுகிறது. இவ்வுலகில் நம்மால் இனிவாழவே முடியாது என்கிற சூழ்நிலைகள் வரலாம். அந்த நிலையிலும் அவர் நம்மோடு இருந்து நம்மை பாதுகாக்கிறவராக இருக்கிறார். ஒருவரும் நம்மை தொட முடியாது. தண்ணீரை கடக்கும்போதும், அக்கினியில் நடக்கும்போதும், இக்கட்டான எந்த சூழ்நிலையிலும் ஒரு முடிகூட கருகாதபடி நம்மை பாதுகாப்பார். தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார். அவர்கள் நம்மை தாங்கி, ஏந்தி செல்லுவார்கள். **"நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன், நீ ஆறுகளைக் கடக்கும்போது அலைகள் உன்மேல் புரளுவதில்லை நீ அக்கினியில் நடக்கும்போது**

**வேகாதிருப்பாய், அக்கினி ஜுவாலை உன் பேரில் பற்றாது (ஏசாயா 43:2)** இந்த வார்த்தைகளை மனதில் பதித்துக்கொள்ளுங்கள். கர்த்தருடைய பாதுகாப்பு இல்லாமல் நம்மால் ஒரு நாளையும் கடந்து செல்ல முடியாது. நம்மால் ஜெயிக்கவும் முடியாது. நம் வாழ்க்கையில் எத்தனையோ காரியங்கள் நம்மையும் அறியாமல் நடந்துக்கொண்டிக்கிறது. இன்றைக்கு சாலையில் நடந்து சென்றாலும் பாதுகாப்பில்லை. வீட்டிற்குள் இருந்தாலும் பாதுகாப்பில்லை என்ற நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனாலும் நம்முடைய ஜீவனை பாதுகாக்க கர்த்தர் வல்லவராய் இருக்கின்றார். அவர் உங்களை பொல்லாத மனுஷர்களின் கண்களுக்கும், பொறாமைகளுக்கும் விலக்கி, மனுஷருடைய கண்ணிகளுக்கும், சூழ்ச்சிகளுக்கு தப்பி செல்லும்படியான வழியை உங்களுக்கு உண்டாக்குவார். எந்த தீங்கும் வராதபடி பாதுகாப்பார். **இனித் தீங்கைக் காணமாட்டாய் (செப்பனியா 3:15).** இந்த வசனம் உங்கள் வாழ்வில் நிறைவேறும். கடந்த மாதங்களில் பல துன்பங்களை, பாடுகளை நீங்கள் சந்தித்திருந்தாலும், இனி கர்த்தர் உங்களை பாதுகாப்பார் என்ற நம்பிக்கையோடு இந்த ஆண்டை கடந்து செல்லுங்கள்.

**மாற்கு 4: 37-41** வரை பார்க்கும்பொழுது சீஷர்கள் படகில் சென்றுக் கொண்டிருந்தப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டானது. இயேசு அவர்களோடு இருந்தார். இயேசு கப்பலின் பின்னணியத்தில் அவர் நித்திரையாயிருந்தார் என வேதம் சொல்கிறது. இயேசு எழுந்து நின்று காற்றை அதட்டினபொழுது அது அப்படியே அமைதலானது. **மத்தேயு 14:24-31** வரையுள்ள வசனங்களில், சீஷர்கள் படவிலே சென்றுக் கொண்டிருந்தப்பொழுது எதிர்க்காற்று பலமாய் வீசியது. அதனால் படவு அலைகளினால் அலைவுபட்டது. இயேசு அந்த சமயத்தில் கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார். அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, ஆவேசம் என பயந்து அலறினார்கள். உடனே இயேசு அவர்களுடன் பேசினார். திடன்கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்றார். உடனே பேதுரு கடலில் குதித்து, ஆண்டவரே நீர்தான் என்றால் நானும் கடலில் நடந்து வரக் கட்டளையிடும் என்றான். இயேசு வா என சொன்னவுடன் பேதுரு நடக்க ஆரம்பித்தான். அப்பொழுது காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு அவன் கையை பிடித்து, அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்று கேட்டார். **மத்தேயு 14:32**-வது வசனத்தில் அவர்கள் படவில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது என பார்க்கிறோம்.

இயேசுகிறிஸ்துவின் பிரசன்னம் நம்மோடிருக்கும்பொழுது எந்த ஆபத்து வந்தாலும் அவையெல்லாம் கடல் அலைகள் அமைதலானது போல அப்படியே அமைதலாகும். உங்கள் வாழ்க்கையில் பயங்கரமான புயல்கள், போராட்டங்கள் வந்து இனி என்ன செய்வது என தெரியாமல் திகைத்து நிற்கும்பொழுது இம்மானுவேல் உங்களோடிருக்கிறார். உங்கள் வாழ்க்கையின் புயல் ஓய்ந்து போகும். ஆகவே கலங்காதீர்கள். இம்மானுவேல் உடனிருந்து எல்லாத்தீங்கிற்கும் விலக்கி உங்களை பாதுகாப்பார்.

## இயேசு ஊழியம் செய்யும்படி இம்மானுவேலாக நம்மோடிருக்கிறார்

இயேசு இம்மானுவேலாக வந்தது எதற்காக? ஊழியம் செய்வதற்காக! இன்றைக்கு பெரிய குடும்பமாக இருக்கும்பொழுதும் அல்லது நண்பர்களுடன் சேர்ந்து செயல்படும்பொழுதும்

யாராவது ஒருவர் எல்லா வேலைகளையும் எடுத்து செய்யமாட்டார்களா என எதிர்பார்ப்பது வழக்கம். சாதாரண ஒரு மனிதனுடைய சுபாவம் எப்பொழுதும் தன்னுடைய வேலைகளை எல்லாம் இலகுவாக்கிக்கொண்டு வாழ்வதாகவே இருக்கிறது. ஒரு சிலர் தான் எல்லா வேலைகளையும் தன் வேலையாக எடுத்து உற்சாகமாய் செய்வார்கள். **மத்தேயு 20:28-ல் இயேசு சொல்கிறார். மனுஷ குமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.** ஊழியம் என்றால் என்ன? இதற்கு அநேக அர்த்தங்களை கூறலாம். ஆவிக்குரியவிதமாக பார்க்கும் பொழுது ஆத்தும ஆதாயம் செய்வதை ஊழியம் என சொல்லுவோம். ஊழியம் என்ற வார்த்தைக்கு ஆங்கிலத்தில் Serve என அர்த்தம். He came to serve என சொல்லப்பட்டுள்ளது. Serve என்றால் என்ன அர்த்தம்? மற்றவர்களுக்கு உதவி செய்வது. மற்றவர்களுக்கு வேலைகளை செய்து தருவது. மற்றவர்களுக்கு நன்மையான காரியங்களை செய்துக்கொடுப்பது. ஒரு வேலைக்காரன் தன் எஜமானின் கட்டளைப்படி செயல்படுவது. தன் எஜமானின் வேலையை இலகுவாக்குவாக்கி தருவது எல்லாம் இந்த Serve என்ற அர்த்தத்தில் அடங்கும்.

இயேசு தான் ஊழியம் செய்யும்படி வந்திருக்கிறேன் என்று ஏன் சொல்கிறார். அவர் ஏன் நமக்கு ஊழியம் செய்ய வேண்டும்? என நீங்கள் யோசித்துப் பார்த்ததுண்டா? **அப்போஸ்தலர் 10:38-ல் "தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார் என எழுதப்பட்டுள்ளது.** ஆம், ஊழியம் செய்வது என்றால் நன்மை செய்வது. நமக்கு நன்மை செய்யும்படியாக இம்மானுவேல் வந்திருக்கிறார். இயேசு நம்மோடு கூட இருக்கிறது ஏதோ ஒரு மந்திரவாதியை போலிருந்து தன்னுடைய பேர் பெருமையை சேர்ப்பதற்காக அல்ல.

**மத்தேயு 9:36-ல்** இயேசு ஜனங்களை பார்த்து மனதுருகினார். அவர் நம்முடைய பாடுகள் மற்றும் கஷ்டங்களை எல்லாம் பார்த்து அவரும் கண்ணீர் வடிக்கிறார். ஒருவேளை "என்னுடைய கஷ்டத்தை புரிந்துக்கொள்ள யாருமே இல்லை" என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இயேசு உங்களைப்பார்த்து, என் பிள்ளைகள் இப்படி கஷ்டப்படுகிறார்களே என ஆதங்கப்படுவார். இயேசு உங்கள் மேல் அனுதாப்படுவார். உங்கள் உற்ற நண்பர்கள் உங்களுக்காக எப்படி அனுதாபப்படுவார்களோ அதே போல இயேசுவும் அனுதாபப்படுவார். உங்கள் குடும்பத்தார் உங்களை நேசிப்பது போல அவரும் உங்களை நேசிக்கிறார். அத்துடன் உங்களுக்கு சமாதானத்தை, விடுதலையை கொடுக்கிறார்.

பிரியமானவர்களே! இயேசு இம்மானுவேலாக இந்த உலகத்தில் வாழ்ந்த பொழுது செய்த காரியங்களை எல்லாம் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். அவர் எல்லா ஜனங்களையும் நேசித்தார். பாவி என்று இல்லை, ஆயக்காரன் என்று இல்லை, ரோமன், யூதன் என வித்தியாசம் பாக்காமல், அனைவர் மீதும் அன்பு காட்டினார். அனைவரையும் விடுதலையாக்கினார். நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனை விடுதலையாக்கினார். யூதர்களின் தொழுகைக்கூட தலைவனின் மகளை குணமாக்கினார். இப்படி எந்த ஒரு வித்தியாசமும் இல்லாமல் இயேசு இம்மானுவேலாக இருந்து நன்மை செய்கிறவராக சுற்றிதிரிந்தார். சரீர சுகம் மட்டுமல்ல, நம் ஆவி, ஆத்துமாவையும் அவர் குணமாக்கி விடுதலையாக்க வல்லவராயிருக்கிறார். அவரிடமிருந்து நாம் அற்புதங்களை பெற்றுக்கொள்ள முடியும். அவர் மூலமாய்தான் நாம் பெற்றுக்கொள்ள

முடியும். இயேசு உங்களோடுகூட இருந்து உங்களுக்கும் இப்படிப்பட்ட காரியங்களை செய்ய வல்லவராயிருக்கிறார்.

இயேசு உங்களுக்கு ஆலோசனை கொடுக்கிறவர். அவர் உங்களோடு கூட இருந்து உங்கள் தேவைகளை சந்திக்கிறவர். **ஏசாயா 9:6–ல்** ஏசாயா தீர்க்கதரிசி சொல்கிறான். **அவர் ஆலோசனைக்கர்த்தர் வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு** என சொல்கிறான். அவர் அற்புதங்களை செய்கிறவர், ஒவ்வொரு நொடியும் அவர் உங்களை வழிநடத்துவதை, உங்களுக்கு ஊழியம் செய்வதை நீங்கள் உணர்ந்துக்கொள்ள முடியும். **யோவான் 6–ம்** அதிகாரத்தில் இயேசுவின் பிரசங்கத்தை கேட்ட திரளான ஜனங்களை அவர் பசியோடு அனுப்பவில்லை. அந்த ஜனங்களை பார்த்து மனதுருகி, வழியிலே சோர்ந்து போகாமல் செல்ல, அவர்கள் வயிறார உண்ணும்படி உணவு கொடுத்து அனுப்பினார். இதனால் தான் பேதுரு இயேசுவைப் பார்த்து, அவருடைய செயல்களை கண்டுக்கொண்டவனாய், நாங்கள் எங்கு செல்லமுடியும், எல்லாமே உம்மிடம் தானே இருக்கிறது. **"நாங்கள் எங்கே செல்வோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" (யோவான் 6:68)** என்று சொல்லுகிறான்.

ஆம், பிரியமானவர்களே! இயேசு இம்மானுவேலாக உங்களோடு இருக்கும் பொழுது உணவு, உடை, இருப்பிடம், குடும்ப பிரச்சனைகள், தேவைகள் இதையெல்லாம் குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. அவர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார். அதனால் தான் அவர் இம்மானுவேல் என்ற பெயருடன் நம்மோடு இருக்கிறார். யோகோவாயீரே என்ற நாமத்தில், அவருடைய பர்வதத்தில் எல்லாம் பார்த்துக் கொள்ளப்படும். **"அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி. 2:8)** எதற்காக தம்மை தாழ்த்தினார்? நம்முடைய கஷ்டங்களை உணர்ந்துகொள்ள, நமக்கு எப்படி ஊழியம் செய்ய வேண்டும் என்பதை புரிந்துக் கொள்ள, நம்மை எப்படி சந்திக்க வேண்டும் என்பதை அறிந்துக்கொள்ள தம்மையே தாழ்த்தினார். நாம் பாவம் செய்யும்பொழுது, இயேசு, என் பிள்ளைகள் பாவத்திலிருந்து வெளியே வரமாட்டார்களா என்று அனுதினமும் ஏங்குகின்றார். அதற்காகவே இயேசு நம்மைப்போலவே மனுஷனாய் மாறினார். **"நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்". (எபி. 4:15)** நாம் எப்படி பரிசுத்தமாக வாழ வேண்டும் என்று அவர் நமக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார். வானத்திலிருந்துக்கொண்டு இவற்றை கற்றுத்தரவில்லை. அவர் நம்மோடுகூட மனுஷனாக, இம்மானுவேலாக வாழ்ந்து அனைத்தையும் செம்மையாக முடித்து, ஆசீர்வாதமாக வாழ நமக்கு சொல்லி சென்றிருக்கிறார்.

இறுதியாக இயேசு சிலுவை மரணத்திற்கு செல்லும்பொழுது கூட **யோவான் 13: 1-10** வசனங்களில் தம்மை தாமே தாழ்த்தி சீஷர்களின் பாதங்களை கழுவினார். எதற்கு அப்படி கழுவ வேண்டும் என்று பேதுரு கேட்கும் பொழுது "உன் கால்களை கழுவ நீ அனுமதிக்கவில்லையென்றால், என்னிடத்தில் உனக்கு பங்கில்லை" என்று சொன்னார். நம்மை தம்மோடுகூட ஒரு பங்காக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். எந்த ஒரு வித்தியாசமும் பாராட்டாமல் நம்மையும் பங்காக்கிக் கொள்ள, சேர்த்துக்கொள்ள, நமக்கு எல்லாவிதத்திலும் ஒத்தாசை செய்ய அவர்

விரும்புகிறார். இப்படிப்பட்ட இம்மானுவேல் இன்று உங்களோடுகூட இருந்து உங்களுக்கும் ஊழியம் செய்ய கற்றுக்கொடுப்பார். அவர் பரிசுத்த ஆவியானவராக உங்களுக்கும் ஊழியம் செய்வார்.

கடைசியாக அவர் பரலோகத்திற்கு ஏறி சென்றபொழுது பரிசுத்த ஆவியானவரை நமக்கு அருளினதாலே. அந்த பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே இன்றும் ஜீவித்து நமக்கு ஊழியம் செய்பவராக இருக்கிறார். சோர்ந்து போகாதிருங்கள்! எனக்கு உதவி செய்ய ஆட்கள் இல்லை. என்னை ஆறுதல்படுத்த யாரும் இல்லை என நாள் முழுவதும் கலங்கி நிற்கிறீர்களா? இந்த சூழ்நிலையில் இம்மானுவேலாக அனைத்தையும் செய்ய வல்லவராக இயேசுகிறிஸ்து உங்களோடு கூட இருக்கிறார்.

## இம்மானுவேல் நம்மோடு இருக்கிற படியால் நாம் உயர்த்தப்படுகிறோம்!

நாம் அவரால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களாக இருப்பதால் அவர் நம்மோடு இருக்கிறார். நம்மை உயர்த்துவதற்காக நம்மோடு இருக்கிறார். **லூக்கா 1:28-ல் தேவ தூதன் மரியாளைப் பார்த்து. கிருபை பெற்றவளே. வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்.** இந்த உலகத்தில் எந்த ஸ்திரீக்கும். எந்த ஒரு கன்னிப்பெண்ணுக்கும் கிடைக்காத ஒரு பாக்கியம் மரியாளுக்கு கிடைத்தது. இந்த மரியாள் சாதாரணமான ஒரு பெண். எந்த முக்கியத்துவமும் கொடுக்கப்படாத. தனித்துவம் இல்லாத ஒரு பெண்ணை தேவன் தெரிந்தெடுத்தார். உன்னதத்தின் பெலனால் அவளை நிறைத்தார். பரிசுத்த ஆவியானவர் அவளுக்குள் வந்தப்பொழுது தான் அவள் கர்ப்பவதியாகி இயேசுவை



பெற்றெடுத்தாள். **"நான் ஆண்டவருக்கு அடிமை (லூக்கா 1:38)** எனக் கூறி தன்னை தாழ்த்தினாள். அப்படி என்றால் தான் ஒன்றும் இல்லாதவள் என்று அர்த்தம். **லூக்கா 1:48-வது வசனத்தில் "அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார். இதோ. இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்** என்று கூறி தேவனை புகழ்ந்து பாடுகிறாள். தேவன் இம்மானுவேலாக அவளுக்குள் உருவானதின் நிமித்தமாகவும், அவள் மூலமாக இந்த உலகத்திற்கு இயேசு கொடுக்கப்பட்டதின் நிமித்தமாக அவள் உயர்த்தப்பட்டாள், மேன்மைப் படுத்தப்படுத்தப்பட்டாள், பாக்கியவதியானாள்.

பிரியமானவர்களே! இதுதான் நமக்கு கொடுக்கப்படுகிற ஒரு சிறப்பு வெகுமதி. இந்த கிறிஸ்துமஸ் நன்னாளிலே, நீங்கள் பரிசுகளை பெறுவதற்காக, அல்லது வெகுமதிகளை கொடுப்பதற்காக காத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் எல்லாவற்றையும் விட பெரிய வெகுமதி

இம்மானுவேலான இயேசுகிறிஸ்து. இந்த இயேசு உங்களுக்கு கொடுக்கப்படும்பொழுது, அதுவே உங்களுக்கு மிகப்பெரிய ஒரு பெரிய பட்டம், ஒரு மேன்மை! தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடே இருப்பதினால் அவர்கள் விசேஷித்தவர்களாக இருப்பதாக மோசே கூறுகிறான். எல்லோரும் விசேஷித்தவர்கள் அல்ல, தேவன் அவர்களோடுகூட இருப்பதால் அவர்கள் விசேஷித்தவர்கள். **எனக்கும் உமது ஜனங்களுக்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதினால் அறியப்படும், நீர் எங்களோடே வருவதினால் அல்லவா? இப்படியே பூமியின்மேலுள்ள ஜனங்கள் எல்லாரிலும், நானும் உம்முடைய ஜனங்களும் விசேஷித்தவர்கள் என்று விளங்கும் என்றான் (யாத்தி. 33:16)** இயேசு நம்மோடு இருப்பதால்தான் நாம் விசேஷித்தவர்களாக மாறுகிறோம்.

பிரியமானவர்களே! இன்றைக்கு அவர் உங்களோடுகூட இருக்கிறார். உலகத்தில் உள்ள கோடிக்கணக்கான மக்களில் நீங்கள் நினைக்கப்படாதவர்களாக, மறக்கப்பட்டவர்களாக இல்லை. ஒதுக்கப்பட்டவர்களாக இல்லை. நீங்கள் விசேஷித்தவர்களாக இருக்கிறீர்கள். ஏன் தெரியுமா? இம்மானுவேலாகிய இயேசு கிறிஸ்து உங்களோடு இருக்கிறார். அவர் உங்களோடு இருப்பதால் உங்களுக்கு ஆசீர்வாதம் மட்டுமல்ல, மிகப்பெரிய மேன்மையும் உண்டாகும். நீங்கள் ஒருபோதும் தாழ்ந்து போகவே மாட்டீர்கள். அவர் என்றென்றைக்கும் எப்போதும் உங்களை உயர்த்தி, மேன்மைப்படுத்தி ஆசீர்வதிப்பார்.

சீஷர்கள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பபடும் வரைக்கும் அங்கே எருசலேம் மேல் வீட்டறையில் தரித்திருந்தார்கள். பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட பிறகே அவர்கள் வல்லமை நிறைந்த அப்போஸ்தலர்களாக மாறிவிட்டார்கள். அப்படி மாறின பொழுது ஜனங்கள், தேசங்கள் அவர்களைப்பார்த்து பயப்படும் அளவிற்கு அவர்களுக்கு மேன்மை உண்டாகிறது. உலகத்தை கலக்குகிறவர்களாக மேன்மைப் படுத்தப்பட்டார்கள். **தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார், எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார், எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார், எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார் - ரோமர் 8: 29,30** அன்பானவர்களே! நீங்கள் பயப்பட வேண்டாம், நீங்கள் மகிமைப்படுவதற்கும், மேன்மையை பெறுவதற்கும் அவர் உங்களோடுகூட இருந்தால் போதும். அப்பொழுது ஜனங்கள் உங்களை விசேஷித்தவர்கள் என்று அடையாளம் கண்டுக்கொள்வார்கள். இயேசு தான் நமக்கு அடையாளம். இம்மானுவேல் நம்மோடு இருப்பதே நமக்கு பெரிய அடையாளம். உலகத்திலே வேறு எதுவுமே நமக்கு அடையாளமில்லை. சிலுவையை அணிந்து கொண்டாலோ, பல பேருக்கு பல காரியங்களை கொடுப்பதாலோ, பெரிய பிரசங்கங்கள் செய்வதாலோ நாம் கிறிஸ்தவர்களாகி விட முடியாது. இயேசு நம்மோடு இருக்கின்றாரா? அவரை நாம் சுமந்து உலகில் திரிகின்றோமா? என்று ஆராய்ந்து பாருங்கள். உலகத்தில் நாம் விசேஷித்தவர்கள், மேன்மை பெற்றவர்கள். ஆகவே நீங்களும் அதே காரியத்தை யோசியுங்கள். இந்த கிறிஸ்துமஸ் நாட்களிலே தேவன் உங்களை சந்தோஷப்படுத்துவார், மேன்மைப்படுத்துவார், உங்கள் தேவைகளை சந்திப்பார், உங்களை ஆறுதல்படுத்துவார். எல்லா விதங்களிலும் உங்களோடுகூட இருந்து உங்களை பாதுகாப்பார்.

# துதி அறிக்கை

## அறுவை சிகிச்சையின்றி அற்புத சுகம்



எனது பேரனுக்கு சிறுநீர் போகும் இடத்தில் வீக்கம் ஏற்பட்டு வலி, வேதனை தாங்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டான். மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறினர். இதனால் மிகவும் கவலையடைந்தோம். இந்நிலையில் அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு எனது பேரனுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். அந்த நேரத்தில் Dr.ஜேன் ஜாஷ்வா அவர்கள் பேரனுக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். நானும் பொருத்தனையோடு ஜெபித்தேன். ஒருசில நாளில் தேவ கிருபையால் வீக்கம் சரியானது. அதன்பின் பரிசோதனைக்கு சென்றபொழுது, மருத்துவர்கள் அறுவை சிகிச்சை வேண்டாம் என கூறிவிட்டனர். அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

- திருமதி. கிரேஸ், தூத்துக்குடி.



## அமெரிக்க குடியுரிமை கிடைத்தது!

அன்பரின் ஊழியத்துடன் பல ஆண்டுகளாக எங்களுக்கு தொடர்பு உண்டு. கடிதம் வாயிலாக என் ஜெப விண்ணப்பங்களை அனுப்பி வைப்பேன். எனது மகள் அமெரிக்க தேசத்தில் குடும்பமாக வாழ்ந்து வருகின்றார்கள். அந்நாட்டின் குடியுரிமை (Green Card) கிடைக்காமல் மனக் கவலையுடன் காணப்பட்டாள். கடந்த முறை தூத்துக்குடியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டு, ஐயா அவர்களிடம் மகளுக்கு Green Card கிடைக்க ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். கடந்த அக்டோபர் மாதம் என் மகள் மற்றும் பேரனுக்கு Green Card கிடைக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். தேவனுக்கே மகிமை!

- திரு.ஜேக்கப் தர்மராஜ், தூத்துக்குடி.

**Telugu WhatsApp No: +91 91770 87860**

# ஆறு வருடங்களுக்கு பிறகு குழந்தை பாக்கியம்

என் மூத்த மகனுக்கு திருமணமாகி ஆறு ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லை. அதற்காக பல மருத்துவ சிகிச்சைகள் மேற்கொண்டு எந்த பயனுமில்லை. இந்நிலையில் கடந்த 2024ம் வருடம் தூத்துக்குடியில் நடைபெற்ற அற்புதத்தின் மாலை கூட்டத்தில் கலந்து கொண்டு Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் எனது மகனுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். உடனே ஐயா பாரத்துடன் ஜெபித்தார்கள். மருமகள் கர்ப்பம் தரிக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். கடந்த ஆகஸ்ட் மாதம் அழகான பெண் குழந்தையை பெற்றெடுக்க சர்வ வல்ல தேவன் கிருபை பாராட்டினார். அற்புதம் செய்து எங்களை மகிழ்ச்சிபடுத்திய தேவனை நன்றியுடன் துதிக்கின்றோம்



– திருமதி. தைா. தூத்துக்குடி.

# ஆடு சுகம் பெற்றது!

எங்களுடைய கிராமத்தில் எங்கள் குடும்பம மட்டுமே இயேசுவை ஏற்றுக்கொண்ட குடும்பம். அதனால் கிராமத்தில் எங்களுக்கு பலவிதத்திலும் நெருக்கடிகளை தந்துக் கொண்டிருக்கிறார்கள். வீட்டிற்கு கரண்ட் கிடைக்க தடை செய்தார்கள். நல்ல தண்ணீர் வருவதற்கு தடை செய்தார்கள். நாங்கள் வளர்த்து வருகிற ஆட்டுக்குட்டிகளை அடித்து கொன்றும் இருக்கிறார்கள். ஒரு முறை எங்களுடைய சினை ஆட்டை அடித்துப் போட்டுவிட்டார்கள். ஆடு மூச்சு விட சிரமப்பட்டது. ஆட்டின் வயிறு வீங்கியிருந்தது. அந்த நேரத்தில் அன்பரின் ஊழிய ஜெப எண்ணெயை எடுத்து ஆட்டிற்கு தடவி பொருத்தனையோடு ஜெபித்தேன். அதன்பின் ஆட்டிற்கு நல்ல சுகம் உண்டாகி. இரண்டு குட்டிகளை பெற்றெடுக்கும்படி கர்த்தர் உதவி செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

– திருமதி. வனிதா மேரி. தஞ்சாவூர்.



**Tamil WhatsApp No: +91 95004 87059**



# தடை நீங்கி பணம் கிடைத்தது!

நாங்கள் கடன் வாங்கி அதிக கஷ்டங்களை அனுபவித்தோம். அந்த நேரத்தில் எங்கள் வீட்டின் பக்கத்திலிருந்த கால்வாய் எங்களுடைய இடத்தில் ஓடியதால் அந்த இடத்தை அரசாங்கம் வாங்கியது. அந்த பணம் எங்களுக்கு கிடைக்காதபடி பலர் தடை செய்தார்கள். உடனே நான் Dr. ஆனந்த ஸ்திரா அவர்களுக்கு அந்த காரியத்தை சொன்னேன். ஐயா பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். தற்பொழுது அந்த பணம் முழுவதும் எனக்கு கிடைக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**- சகோ. சண்முகவேல் @ சாமுவேல்**

# இழந்த வேலை திரும்ப கிடைத்தது!

எங்களுடைய மூத்த மகன் வெளிநாட்டில் உள்ள ஒரு கம்பெனியில் வேலை செய்துக்கொண்டு வந்தார். திடீரென அந்த வேலையை இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். அந்த நாளில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் என் மகனுடைய வேலைக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். ஐயா பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் அற்புதம் செய்தார். மகன் வேலை செய்த அதே கம்பெனியில் மகனை அழைத்து மீண்டும் வேலைக்கு வரும்படி சொன்னார்கள். அற்புதம் செய்த கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

- திருமதி. ஆலிஸ், நாகர்கோவில்.

# கடன் பாரத்திலிருந்து விடுதலையானேன்!

நான் திருச்சியில் நடைபெறுகிற அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்திற்கு தவறாமல் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறேன். கர்த்தர் தாமே கடன் பிரச்சனையிலிருந்து என்னை விடுதலையாக்கினார். அத்துடன் நாங்கள் கடன் வாங்காதபடி கர்த்தர் பாதுகாத்து வருகிறார். எங்கள் பணத்தேவைகளை சந்தித்து, அற்புதமாய் வழிநடத்திக்கொண்டிருக்கிற கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

English WhatsApp No: +91 94889 32937

# DECEMBER 2025

**01** கர்த்தர் நம்மோடே இருக்கிறார். (எண்.14:9)

**02** நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஓரேபிலே நம்மோடே உடன்படிக்கை பண்ணினார். (உபா.5:2)

**03** நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மைக் கைவிடாமலும், நம்மை நெகிழவிடாமலும், அவர் நம்முடைய பிதாக்களோடு இருந்ததுபோல, நம்மோடும் இருந்து... (1இராஜா.8:57)

**04** கர்த்தர் மலையிலே அக்கினியின் நடுவிலிருந்து முகமுகமாய் உங்களோடே பேசினார். (உபா.5:4)

**05** பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான். (2இராஜா.6:16)

**06** நமக்குத் துணைநின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர் தானே... (2நாளா.32:8)

**07** சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். (சங்.46:7)

**08** கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார். (சங்.100:3)

**09** ...உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர். (1யோவான் 4:4)

**10** உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடிருந்து நான்கு திசையிலும் உங்களுக்கு இளைப்பாறுதலைத் தந்தார். (1நாளா.22:18)

**11** நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார். (2நாளா.15:2)

**12** இயேசு: இன்னும் கொஞ்சக் காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும். (யோவான் 12:35)

**13** ...சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார். (பிலி.4:9)

**14** யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். (சங்.46:7)

**15** இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள். (யோவான் 12:35)

# DECEMBER 2025

**16** நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் சந்ததியோடும், ...என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன். (ஆதி.9:9-10)

**17** ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள். (யோவான் 12:36)

**18** நாம் நடந்த எல்லா வழியிலும், நாம் கடந்து வந்த எல்லா ஜனங்களுக்குள்ளும் நம்மைக் காப்பாற்றினவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர்தாமே. (யோசுவா 24:17)

**19** கர்த்தர் நம்மைக் காப்பாற்றி, நமக்கு விரோதமாய் வந்திருந்த அந்தத் தண்டை நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார். (சாமு.30:23)

**20** கர்த்தர் நம்மை நிச்சயமாய்த் தப்புவிப்பார். (2இராஜா.18:30)

**21** இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார். (சங்.48:14)

**22** அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார். (ஏசா.25:9)

**23** உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது. (லூக்கா 1:79)

**24** இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும். (ஏசா.25:9)

**25** இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். (மத்.1:23)

**26** கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா; அவர் நம்மை இரட்சிப்பார். (ஏசா.33:22)

**27** ...நம்மேல் பாரஞ்சுமத்தினாலும் நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே. (சங்.68:19)

**28** பயப்படாமலும் கலங்காமலுமிருங்கள்; அவனோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம். (2நாளா.32:7)

**29** அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார். (யோவான் 1:14)

**30** மகாதீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் (லூக்.7:16)

**31** உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள். (2தீமோ.1:14)


We Are Hiring
Join Our Team
ACCOUNTANT
(B.Com. / M.Com. Graduates)
Candidates with Experience Preferred
ministryof jesushr@gmail.com


வங்கிக் கணக்குகளின் விபரம்
MINISTRY OF JESUS
A/C NO. 10848474869
ANBARIN OOZHIYAM
A/C NO. 10848559426
DR. ANANDA STIRA
A/C NO. 10848469699
IFS Code: SBIN 0000930
State Bank of India, Cantonment, Trichy Main Branch.
காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.
(10.00 AM - 6.00 PM)


CAMERA MAN / VIDEO EDITORS / GRAPHIC DESIGNER
WE'RE
HIRING
JOIN US
(Any UG/PG Candidates)
Skills Required: Able to work in Adobe Photoshop
Adobe illustrator, Coreldraw, Adobe Indesign
Adobe Premire Pro & After Effects
Male / Female, Christians preffered
Apply Now: ministryofjesus@gmail.com

# SJ SAVES TRUST



**ஒரு பிள்ளைக்கு ஆகும் செலவு Rs.1,500/-**

**மொத்தம் 500 பிள்ளைகளுக்கு Rs.7,50,000/-**





**ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ் செய்து, சிறுமைப்பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள். பலவீனனையும் எளியவனையும் விடுவித்து, அவர்களைத் தப்புவியுங்கள். (சங். 82:3-4) (சங்கீதம் 72:12-13)**

நமது சர்வவல்ல தேவனுடைய கிருபை யினாலும், உங்கள் ஜெபங்களினாலும், தாராளமான உதவிகளினாலும் கடந்த மாதம் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள செல்லப்பபாளையம், குமாரசாமி பாளையம், சின்னசோளி பாளையம், ஜேடர் பாளையம், ஓலப்பாளை யம், மல்லிகாபுரம், பில்லிக்கல்பாளையம் போன்ற கிராமங்களில் உள்ள வயதானவர்கள் மற்றும் விதவைகள் 130 பேருக்கு S. J. SAVES TRUST மூலம் பாய்கள், போர்வைகள், சத்துப்பொருட்கள், நல்ல மருந்துகள் மற்றும் புடவைகள் முதலானவை கொடுக்கப்பட்டது. அனைவருக்கும் பிரியாணி மற்றும் இனிப்பு, கார வகைகளும் தரப்பட்டது. அனைவரும் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டார்கள்.

கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்து எளிமை யானவர்களையும், கைம்பெண்களையும் அன்பு செய்து ஆதரித்தது போல, நாமும் கிறிஸ்துவின் அன்பை ஜாதி,








மத, இன வேறுபாடின்றி அனைவரையும் அன்பு செய்து வாழுவோம். தொடர்ந்து கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருக்கி ஏவட்டும்.

இந்த கிறிஸ்துமஸ் காலத்தில் சுமார் 500 பிள்ளைகளுக்கு புத்தாடைகள், கேக், நல்ல உணவு மற்றும் குளிர்காலத்திற்கான பாய், போர்வை, மருந்துகள் போன்றவை கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இதற்காக ஊக்கமாக ஜெபித்துக்கொள்ளுங்கள். கர்த்தர் தாமே உங்களை அதிகமாய் ஆசீர்வதிப்பாராக!







S. J. Saves Trust – ல் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய

Bank A/C.Name : SJ SAVES TRUST
Account No : 019150310875369
Bank Name : Tamilnadu Mercantile Bank
Branch : Palakarai, Trichy.
IFSC Code : TMBL 0000019
A/C Type: Current

S. J. S. T. மருத்துவமனை பணிகளுக்கு உதவி செய்ய

Bank A/C.Name : SJ SAVES TRUST
Account No : 36477148891
Bank Name : State Bank of India
Branch : Cantonment, Trichy  Main Brach
IFSC Code : SBIN 0000930
A/C Type: Current






அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

"இந்த QR code-ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 9500487061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்"

மணியார்டர் (MO), காசோலை (Cheque), வரைவோலை (DD), Online Donation (Website) Bank Account, QR code, UPI, Google pay, Paytm, Phonepe.

முகவரி: அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி 620018

Paytm G Pay UPI PhonePe

we are HIRING

Join OUR TEAM

CORRESPONDENCE

(Any UG/PG Candidates)
Skills Required: Typing & Computing Skills
(Tamil,English)

DRIVER

SEND YOUR RESUME TO
ministryofjesush@gmail.com

# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும் காலை 9:30 மணி - 11:30 மணி

அபிஷேகம் நிறைந்த பாடல்கள், ஆவிக்குரிய தேவ செய்தி,
உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

எந்தவிதமான வேறுபாடுமின்றி அனைவரும்
இவ்வாராதனையில் பங்கு பெறலாம்.




## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**Facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

தினமும் காலை 5 மணி




# அனுதின அற்புதம்

Every Day Bible Devotion & Prayer Just For A Few Minutes

FOLLOW US ON:

இந்த QR CODE - ஐ ஸ்கேன் செய்து நமது அனுதின அற்புதம் நிகழ்ச்சிகளைக் காணலாம்.

## அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி நேரங்கள்

தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

NAMBIKKAI TELEVISION

சனி, ஞாயிறு

8:30PM to 9:00PM

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

ARADHANA TV

வியாழன், வெள்ளி

7:00PM to 7:30PM

# உலக செய்திகள்

தமிழகத்தில் நிகழாண்டில் 79,462 பேருக்கு காசநோய் உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுகுறித்து சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது. இந்தியாவில் லட்சம் பேரில் 179 பேர் காசநோயால் பாதிக்கப்படுகிறார்கள். தமிழகத்தில் அந்த எண்ணிக்கை லட்சத்துக்கு 125 ஆக உள்ளது. காசநோயை ஒழிப்பதற்கு அரசு சார்பில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மருத்துவப் பரிசோதனை கள், மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், காசநோயை விரைவாக கண்டறிவதற்கு, 'சிபிநாட் மற்றும் ட்ரூநாட்' போன்ற பரிசோதனைக கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுடைய ஊட்டச்சத்தை மேம்படுத்தும் வகையில் ஒவ்வொரு மாதமும் பாதிக்கப்பட்டவர்களின் வங்கிக் கணக்கில் ரூ.1,000 செலுத்தப்படுகிறது. கடந்த ஆண்டில் மட்டும் இந்தத் திட்டத்தின் கீழ் ரூ.31.1கோடி வழங்கப் பட்டுள்ளது.



அமெரிக்கா கொஞ்சம் இறையாண்மையை இழந்துவிட்டது. அமெரிக்கா இப்போது கடினமான முடிவை எதிர்கொள்கிறது என நியூயார்க் நகர மேயர் தேர்தலில் தோல்வி குறித்து அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க மக்கள் ஒரு வருடத்திற்கு முன்பு என்னை தேர்ந்தெடுத்ததன் மூலம் இறையாண்மையை மீட்டெடுத்தனர். தற்போது நியூயார்க்கில் நாங்கள் சிறிது இறையாண்மையை இழந்தோம்.



தென்கொரியா தலைநகர் சியோலில் உள்ள சேஜோங் பல்கலைக்கழகத்தில் உலகளாவிய திருக்குறள் மாநாடு முதல் முறையாக நடைபெற்றது. திருக்குறளை முதன் முதலாக ஐரோப்பிய மொழியான லத்தீனில் 1730-ல் மொழி பெயர்த்த இத்தாலிய ஆய்வாளரான ஜோசப் பெஸ்கி (வீரமாமுனிவர்) பிறந்த நாளான நவம்பர் 8ஆம் தேதி இந்த மாநாடு நடைபெற்றது. தென்கொரியா தமிழ் ஆராய்ச்சி அமைப்பின் ஏற்பாட்டில் 'காலம் கடந்த உண்மைகள் - சமூகம், அரசியல், பண்பாடு முதல் உலகளாவிய பொருத்தம் வரை' என்ற தலைப்பில் நடைபெற்ற மாநாட்டில் திருக்குறளின் தத்துவங்களை நவீன உலகின் பல்வேறு துறைகளில் பயன்படுத்துவது குறித்த ஆழமான கலந்துரையாடல்கள் நடைபெற்றன. 10-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 100-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள் தங்களின் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். சிறந்த 3 கட்டுரைகளுக்கு பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

## திருச்சியில்

# சிறப்பு உபவாச ஜெபம்

**நேரம்**
**காலை 9:30 மணி முதல்**
**மதியம் 2:00 மணி வரை**

டிசம்பர்
**06**
(சனிக்கிழமை)

**தேவ செய்தி**
**Dr.ஆனந்த ஸ்திரா & குடும்பத்தினர்**

இடம் : அன்பரின் ஊழிய ஜெப மையம், 10வது குறுக்குத்தெரு
மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு, தில்லைநகர்,திருச்சி – 18
தொடர்புக்கு : 99421 66066, 99446 66066

உங்கள் அபிஷேகத்திற்காக, ஆவிக்குரிய ஆசீர்வாதத்திற்காக, வரங்களால், கனிகளால் நீங்கள் நிரப்பப்பட விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.
குறிப்பு : மதிய உணவு வழங்கப்படும்!

## 2026 திருச்சியில்

# விடுதலையின் இரவு

ஜனவரி
**10**
(சனிக்கிழமை)

**மாலை 6:00 மணி முதல் இரவு 8:30 மணி வரை**

பரவசமூட்டும் ஆராதனை! அனல் பறக்கும் தேவவார்த்தை! விடுதலையின் ஜெபம்!
வாருங்கள்! ஆசீர்வாதம் பெற!

தேவ செய்தியாளர்கள்: Rev.Dr.A. ஜாஷ்வா & குடும்பத்தினர்

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10-வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு, தில்லைநகர், திருச்சி-18


கூட்டத்தில் பங்குபெறுகிற அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்படும்
my deliverance church youtube channel வாயிலாக விடுதலையின் இரவு செய்தியை நேரலையிலும் பார்த்து பயனடையலாம்.
வியாதி, சத்துரு போராட்டம், கடன் பாரம், வேலை இல்லாமை மற்றும் பல்வேறு பிரச்சனைகளினால் துயரப்படும் மக்களுக்காக் சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.

# தாம்பரத்தில்

# அற்புத குடும்ப ஆசீர்வாத கூட்டம்

டிசம்பர்
**13**
(சனிக்கிழமை)





**நேரம் : காலை 9:30 மணி முதல்**
**மதியம் 2:00 மணி வரை**

**தேவ செய்தியாளர்கள்**
Dr.ஆனந்த ஸ்திரா
Dr. ஜேன் ஜாஷ்வா

இடம் : அன்னை அருள் திருமண மாளிகை, வேளச்சேரி ரோடு, கிழக்கு தாம்பரம்,
சேலையூர், மாற்கு சர்ச் எதிரில், கேம்ப் ரோடு பேருந்து நிலையம், சென்னை - 73

**தொடர்புக்கு** : 94888 45627 & 0431 – 2741925

# திருச்சியில்

# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

**காலை 9:30 மணி முதல் மதியம் 2:00 மணி வரை**

டிசம்பர்
**27**
சனிக்கிழமை



**தேவ செய்தியாளர்கள்: Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்**

**இடம்: அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10–வது குறுக்குத்தெரு**
**மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு தில்லைநகர், திருச்சி–18**

தொடர்புக்கு : செல் 9488845627, 0431-2741922 (கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)



டிசம்பர்
25
வியாழக்கிழமை

# கிறிஸ்துமஸ்
## பண்டிகை ஆராதனை

நேரம் : அதிகாலை 6:00 மணி

**கிறிஸ்துமஸ் சிறப்பு செய்தி: Dr. ஆனந்த ஸ்திரா**



டிசம்பர்
31
புதன்கிழமை

## புது வருட ஆசீர்வாத ஆராதனை

நேரம் : இரவு 10.30 மணி முதல்

**புதுவருட வாக்குத்தத்த செய்தி: Rev.Dr.A.ஜாஷ்வா**

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு, தில்லைநகர், திருச்சி-18

99421 66066 99446 66066

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு ஆராதனையில் பரிசுத்த திருவிருந்து ஆசரிக்கப்படும்.

ஜனவரி
03
சனிக்கிழமை

# 2026 புத்தாண்டு வாக்குத்தத்தம்
# மற்றும் தீர்க்கதரிசன கூட்டம்

நேரம் : காலை 10:00 மணி முதல் மதியம் 02:00 மணி வரை

**புதுவருட வாக்குத்தத்த செய்தி: Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்**

இடம்: அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு, தில்லைநகர், திருச்சி.

தொடர்புக்கு : செல் 9488845627, 0431-2741922